# கனிஸ்ட இடைநிலை வகுப்பு மாணவர்களின் வாசிப்புத்திறன் பின்னடைவு கற்றல் செயற்பாடுகளில் ஏற்படுத்தும் சவால்கள்

**முஹம்மட் ஜமால்தீன் பாத்திமா ஸஜீதா, ராஜேந்திரன் தக்ஷாயினி**
கல்வி மற்றும் பிள்ளை நலத்துறை,
கலை கலாசார பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
*sajeethajamaldeen1997@gmail.com*

## ஆய்வுச் சுருக்கம்

வாசிப்புத் திறன் பின்னடைவால் கனிஸ்ட இடைநிலை வகுப்பு மாணவர்கள் கற்றல் செயற்பாடுகளில் பல்வேறு இடர்பாடுகளை எதிர்கொள்கின்றனர். அத்தகைய இடங்களைக் கண்டறிந்து அதற்கான சிபார்சுகளை முன்வைத்தல் என்ற நோக்கத்தில் அமைந்த இவ்வாய்வானது, ஏறாவூர் கல்வி கோட்டப் பாடசாலைகளில் உள்ள கனிஸ்ட இடைநிலை வகுப்பு மாணவர்களை உள்ளடக்கிய பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்ட ஓர் அளவை நிலை ஆய்வாகும். கனிஸ்ட இடைநிலை வகுப்பு மாணவர்களை அடிப்படையாகக் கொண்டு ஆய்வு செய்யப்பட்டமையினால் ஏறாவூர் கல்விக் கோட்டத்திலுள்ள 18 பாடசாலைகளிலிருந்து கனிஸ்ட இடைநிலை வகுப்புக்களைக் கொண்ட 10 பாடசாலைகளும் நோக்க மாதிரியின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டன. 10 பாடசாலைகளிலும் உள்ள அதிபர் தரத்தை உடைய 12 அதிபர்கள் நோக்க மாதிரியின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டதுடன் கனிஸ்ட இடைநிலை வகுப்புக் கற்பிக்கும் 108 ஆசிரியர்களிலிருந்து ஆண், பெண் என்ற ரீதியில் படையாக்கப்பட்டு பின் இலகு எழுமாற்று மாதிரியின் அடிப்படையில் 2:1 எனும் விகிதாசாரத்தின் அடிப்படையில் 54 ஆசிரியர்களும் தெரிவுசெய்யப்பட்டதுடன் 10 பாடசாலைகளின் அறிக்கைகளில் இருந்தும் பெறப்பட்ட வாசிப்புத்திறன் பின்னடைந்த 228 மாணவர்களிலிருந்து ஆண், பெண் என்ற ரீதியில் படையாக்கப்பட்டு பின் இலகு எழுமாற்று மாதிரியின் அடிப்படையில் 2:1 எனும் விகிதாசாரத்தின் அடிப்படையில் 105 மாணவர்களும் ஆய்வு மாதிரியாக தெரிவு செய்யப்பட்டனர். மேலும் மாதிரியாகத் தெரிவு செய்யப்பட்ட 105 மாணவர்களின் 5:1 விகிதத்தில் 20 பெற்றோர்கள் தெரிவுசெய்யப்பட்டனர். தெரிவுசெய்யப்பட்ட மாதிரிகளிடமிருந்து வினாக்கொத்து, நேர்காணல், அவதானம், ஆவணச்சான்றுகள் போன்ற ஆய்வுக்கருவிகள் மூலம் தரவுகள் பெறப்பட்டன. பண்புரீதியாகவும், அளவுரீதியாகவும் பெறப்பட்ட தரவுகள் அனைத்தும் Excel மென்பொருளினூடாக பகுப்பாய்வு செய்யப்பட்டு அட்டவணைகள், வரைபுகள் மூலம் குறித்துக்காட்டப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து முடிவுகள் பெறப்பட்டன. வாசிப்புத்திறன் பின்னடைவால் கற்றல் செயற்பாட்டில் சுயமாக வாசிக்க முடியாமை, பரீட்சை வினாக்கள் மற்றும் பயிற்சிக் கொப்பிகளிலுள்ள வினாக்களை வாசித்து விளங்கி விடையளிக்க முடியாமை, இணைப்பாடவிதான செயற்பாடுகளில் கலந்துகொள்ள முடியாமை, தமிழ்த்தினப் போட்டி நிகழ்வின் போது போட்டிகளில் கலந்து கொள்ள முன்வராமை, போன்ற பல்வேறு சவால்கள் ஏற்படுகின்றன. எனவே, இம்மாணவர்களின் வாசிப்புத்திறனை விருத்தி செய்யும் வகையில் பாடசாலையில் பரிகார செயற்பாடுகள் மேற்கொள்ளல், ஊக்கப்படுத்தல் செயற்பாடுகள், வாசிப்பு பயிற்சியின் போது புதிய கற்பித்தல் முறைகளைப் பயன்படுத்தல், பாடசாலையில் வாசிப்புத்திறனை வளர்ப்பதற்கான தனியான குழு அமைத்தல், வாசிப்புத்திறனை வளர்ப்பதற்கான விசேட பயிற்சி வகுப்புக்கள் நடத்தப்படல் போன்ற தீர்வுகளை முன்வைக்கக் கூடிய வகையில் அதற்கான விதப்புரைகளும் முன்மொழியப்பட்டுள்ளன.

***திறவுச் சொற்கள்:*** *வாசிப்புத் திறன், வாசிப்புத்திறன் பின்னடைவு, கனிஸ்ட இடைநிலை வகுப்பு மாணவர்கள், கற்றல்*

**ஆய்வு அறிமுகம்**

இன்று உலகில் உள்ள பல்வேறு பாகங்களிலும், பல்வேறு துறைகளிலும் பல பரிமாணங்களில் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. புதிய அறிவைக் கண்டறிவதற்கும், கல்வித் துறையில் காணப்படும் பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைக் கண்டு அதனை முன்னேற்றகரமான பாதையில் இட்டுச் செல்வதற்கும் ஆய்வானது அவசியமானதாகக் காணப்படுகின்றது. இந்த வகையில் கற்றல் தொழிற்பாடானது மேம்பட்ட வகையில் இடம்பெறுவதற்கு ஆய்வானது பெரிதும் வேண்டப்படும் ஒரு தேவையாக உள்ளது

கற்றல் கற்பித்தல் செயற்பாடு சிறப்பானதாக அமைவதற்கு வாசிப்புத்திறன் விருத்தி அவசியமாகின்றது. ஆனால் ஒரு சில மாணவர்கள் இவ்வாசிப்புத்திறன் பின்னடைவு காரணமாக கற்றலில் பின்தங்குவதோடு சுய எழுத்தாற்றல், புதியவிடயங்களை உள்வாங்கிக்கொள்ள முடியாதவர்களாகவும் புதிய விடயங்களை அறியும் ஆர்வம் அற்றவர்களாகவும் காணப்படுகின்றனர். இவ்வாறு வாசிப்புத்திறன் பின்னடைந்த மாணவர்களின் ஈடுபாடற்ற கற்றல் முயற்சிகளினால் வகுப்பாசிரியர்கள், பாட ஆசிரியர்கள் சிரமப்படுவதுடன் அலகு முன்னேற்றம், முறையான கலைத்திட்டம் அமுலாக்கம், வினைத்திறனான வகுப்பறைச் செயற்பாடுகளை திருப்திகரமாக மேற்கொள்ள முடியாத நிலைமை காணப்படுகின்றது.

இவ்வாறான சூழலில் ''கனிஸ்ட இடைநிலை வகுப்பு மாணவர்களின் வாசிப்புத்திறன் பின்னடைவு கற்றல் செயற்பாடுகளில் ஏற்படுத்தும் சவால்கள்'' எனும் தலைப்பில் ஏறாவூர் கல்விக் கோட்டத்திற்கு உட்பட்ட 10 பாடசாலைகளில் உள்ள கனிஸ்ட இடைநிலை வகுப்பில் கல்வி கற்கும் (தரம் 06- தரம் 09) மாணவர்களில் வாசிப்புத்திறன் பின்னடைந்த மாணவர்களை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**ஆய்வுப் பிரச்சினை**

மாணவர்களின் கற்றல் செயற்பாட்டிற்கு வாசிப்புத்திறனானது அவசியமானதொன்றாகக் காணப்படுகின்றது. கனிஸ்ட இடைநிலை வகுப்பு மாணவர்கள் வாசிப்புத் திறன் பின்னடைவால் கற்றலில் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். இம்மாணவர்களின் வாசிப்புத் திறன் பின்னடைவால் அவர்களின் கற்றல் செயற்பாடுகள் பாதிப்படைவதோடு பல்வேறு சிக்கல்களையும், இடர்பாடுகளையும் எதிர்கொள்கின்றனர். இவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைக்கு வீட்டுச் சூழல், பாடசாலைச் சூழல், மாணவர்களின் தனிப்பட்ட காரணங்கள் போன்றன எவ்வாறு காரணிகளாக அமைகின்றன. இவற்றுக்கு வழிகாட்டும் வகையில் எவ்வாறான சிபார்சுகளையும் பரிகாரக் கற்பித்தல் செயற்பாடுகளையும் மேற்கொள்ளலாம், மேலும் அதனை சிறப்பாகச் செயற்படுத்த எவ்வாறான உத்திகளை கையாள வேண்டும். போன்றவற்றை ஆராய்ந்து இம்மாணவர்கள் எதிர்நோக்கும் வாசிப்புத் திறன் பின்னடைவை நிவர்த்தி செய்வதற்கான விதப்புரைகளை ஆய்வு நோக்கில் தெளிவுபடுத்துவதுடன், இம்மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை துரிதப்படுத்தி கற்றலில் ஆர்வத்துடன் ஈடுபட உதவும் வகையில் தேவையான ஆலோசனைகளையும் தீர்வுகளையும் முன்வைக்க இத் தலைப்பை தெரிவு செய்து ஆய்வை மேற்கொள்ள தீர்மானித்துள்ளேன்.

இதன்படி ஏறாவூர் கல்விக் கோட்டத்தில் உள்ள பாடசாலைகளில் கனிஸ்ட இடைநிலை வகுப்பில் கல்வி கற்கும் மாணவர்கள் வாசிப்புத்திறன் பின்னடைந்த நிலையில் காணப்படுகின்றனர். அந்தவகையில் இங்கு 228 மாணவர்கள் வாசிப்புத்திறனில் பின்னடைந்த நிலையில் காணப்படுகின்றனர். அதனால் அம்மாணவர்கள் கற்றல் செயற்பாட்டின் போது சவால்களை எதிர்கொள்வதுடன் ஆசிரியர்களும் கற்றல் செயற்பாட்டின் போது இடர்பாடுகளை எதிர்கொள்கின்றனர். இதன்படி இது ஒரு முக்கிய பிரச்சினையாக இப்பிரதேசத்தில் காணப்படுகின்றது. (ஏறாவூர் கல்விக் கோட்ட பாடசாலைகளின் அறிக்கை)

**ஆய்வுப் பிரச்சினைக் கூற்று**

“ஏறாவூர் கல்விக் கோட்ட பாடசாலைகளின் கனிஸ்ட இடைநிலை மாணவர்கள் வாசிப்புத்திறன் பின்னடைவால் கற்றல் செயற்பாடுகளில் இடர்பாடுகளை எதிர்நோக்குவதால் கற்றலில் சிறந்த நிலையினைப் பெறுவதில் பல சவால்களை ஏற்படுத்துகின்றது’’.

அட்டவணை 1:1 வாசிப்புத்திறன் பின்னடைந்தோர் விபரம்

| **இல** | **பாடசாலையின் பெயர்** | **பாடசலையின் வகை** | **தரம் 6** | **வாசிப்புத்திறன் பின்னடைந்தோர்** | **தரம் 7** | **வாசிப்புத்திறன் பின்னடைந்தோர்** | **தரம் 8** | **வாசிப்புத்திறன் பின்னடைந்தோர்** | **தரம் 9** | **வாசிப்புத்திறன் பின்னடைந்தோர்** | **மொத்த மாணவர்களின் எண்ணிக்கை** | **வாசிப்புத்திறன் பின்னடைந்தோர் மொத்த எண்ணிக்கை** |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **1** | **A** | 1AB | 45 | 5 | 44 | 5 | 43 | 4 | 49 | 6 | 181 | **20** |
| **2** | **B** | 1AB | 43 | 5 | 46 | 5 | 44 | 6 | 46 | 5 | 179 | **21** |
| **3** | **C** | 1AB | 40 | 6 | 42 | 4 | 41 | 6 | 45 | 6 | 168 | **22** |
| **4** | **D** | 1AB | 128 | 10 | 99 | 6 | 94 | 4 | 109 | 9 | 430 | **29** |
| **5** | **E** | 1C | 94 | 5 | 99 | 7 | 99 | 7 | 97 | 6 | 389 | **25** |
| **6** | **F** | Type l l | 118 | 6 | 97 | 7 | 103 | 6 | 94 | 8 | 412 | **27** |
| **7** | **G** | Type l l | 105 | 4 | 105 | 8 | 104 | 7 | 88 | 5 | 402 | **24** |
| **8** | **H** | Type l l | 55 | 9 | 51 | 6 | 58 | 7 | 61 | 4 | 225 | **26** |

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **9** | **I** | Type l l | 15 | 4 | 15 | 4 | 20 | 5 | 15 | 4 | 65 | **13** |
| **10** | **J** | Type l l | 12 | 4 | 31 | 5 | 16 | 4 | 16 | 4 | 75 | **17** |
| **மொத்தம்** | | | **655** | **58** | **629** | **57** | **622** | **56** | **620** | **57** | **2526** | **228** |

(மூலம்: ஏறாவூர் கல்விக் கோட்ட பாடசாலைகளின் அறிக்கை)

இத்தரவின் படி ஏறாவூர் கல்விக் கோட்டத்தில் உள்ள கனிஸ்ட இடைநிலை வகுப்புக்களைக் கொண்ட 10 பாடசாலைகளிலும் கனிஸ்ட இடைநிலை வகுப்பில் கல்வி கற்கும் 2526 மாணவர்களில் 228 மாணவர்கள் வாசிப்புத்திறன் பின்னடைந்த நிலையில் காணப்படுகின்றனர். எனவே மாணவர்களின் வாசிப்புத்திறன் பின்னடைவிற்கான காரணங்களுடன் அவ்வாறான வாசிப்புத்திறன் பின்னடைவான மாணவர்கள் கற்றலில் எதிர்கொள்ளும் சவால்களையும் இனங்காண்பதற்காக ஆய்வாளனால் குறித்த பிரதேசத்தில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**ஆய்வின் நோக்கம்**

***பொது நோக்கம்***

வாசிப்புத் திறன் பின்னடைவால் கனிஸ்ட இடைநிலை வகுப்பு மாணவர்கள் கற்றல் செயற்பாடுகளில் பல்வேறு இடர்பாடுகளை எதிர்கொள்கின்றனர். இவ்வாறு கற்றல் செயன்முறையில் எவ்வாறான சவால்களை எதிர்நோக்குகின்றனர் என்பதைக் கண்டறிந்து அதற்கான சிபாரிசுகளை முன்வைத்தல்.

***சிறப்பு நோக்கங்கள்***

1. கனிஸ்ட இடைநிலை வகுப்பில் வாசிப்புத்திறன் பின்னடைவுள்ள மாணவர்களின் தற்போதைய நிலையை அறிதல்.
2. கனிஸ்ட இடைநிலை மாணவர்களின் வாசிப்புத் திறனின் பின்னடைவுக்கான காரணங்களை இனங்காணல்.
3. கனிஸ்ட இடைநிலை மாணவர்கள் வாசிப்புத் திறனின் பின்னடைவு நிலையினால் கற்றல் செயற்பாடுகளில் ஏற்படுத்துகின்ற சவால்களைப் பகுப்பாய்வு செய்தல்.
4. கனிஸ்ட இடைநிலை மாணவர்களின் வாசிப்புத் திறன் பின்னடைவினை நிவர்த்தி செய்வதற்குரிய ஆலோசனைகளை முன்வைத்தல்.

**இலக்கிய மீளாய்வு**

Hadi, S.Haryanto (2022) ஆகியோர் செய்த Classroom Assessment Tool using Learning Management System-based Computerized Adaptive Test in Vocational High Schools என்ற ஆய்வில் பொதுமக்களின் முன் பேசும் மற்றும் முன்வைக்கும் திறன்கள் உலகளாவிய ரீதியில் மாணவர்களிடம் இருக்க வேண்டிய சிறப்புத் திறன்களாகும். இன்று பாடசாலைகளில் வாசிக்கும் திறன் கொண்ட பல மாணவர்கள் குறைவாக இருப்பதாகக் கருதப்படுகிறது.

Monique Senechi (2009) என்பவர் செய்த Literacy language and emotional development என்ற கனடாவில் மேற்கொண்ட ஆய்வு முடிவில் பிள்ளையின் வாசிப்புத்திறனில் காணப்படும் பலவீனம் அவர்களின் சுய கருத்துக்கள், வாசிக்கும் ஆற்றல், பிள்ளை விருத்தியைப் பாதிக்கின்றது. இதனால் பிள்ளையிடம் சிறந்த அறிவையும் திறனையும் ஆரம்ப காலத்திலேயே கற்றுக்கொடுக்க வேண்டும் என கூறியுள்ளார்.

அப்துல் லத்தீப் (2007) கேட்டல், பேச்சு, வாசிப்பு, எழுத்து போன்ற நான்கு அடிப்படைத்திறன்களைப் பற்றியும், வாசிப்பினூடாகவே மாணவன் இன்னோரன்ன விடயங்களையும் சுயமாக இயங்கும் ஆற்றலையும் பெற்றுக்கொள்கின்றான் எனக் கூறியுள்ளார்.

கிறிஸ்ரின் டிலானி (2014) என்பவர் செய்த இடைநிலை மாணவர்களின் வாசிப்பு ஆர்வத்தில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் என்ற ஆய்வில் இடைநிலை வகுப்பு மாணவர்கள் என்பதால் சுயமாக வாசிக்க ஆர்வமுடையவராகக் காணப்பட வேண்டும் என எதிர்பார்க்கின்ற வேளையில் தாமே சுயமாக முன்வந்து வாசிக்க வெட்கப்படுகின்றனர். தம்மைக் குறித்து தாழ்வு மனப்பாங்கு காணப்படுகின்றமையும் என்னால் வாசிக்க முடியாது என்றும், திக்கு நிலையும், எல்லோருக்கும் முன்னால் உரத்து சத்தமிட்டு வாசிக்க முடியாது என்ற நிலையும் காணப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஒருவருக்கு வாசிப்பின் முக்கியத்துவம் எடுத்துக்காட்டுவதுடன் அது வாழ்க்கையில் காலம் முழுவதும் தொடர்ந்து இடம்பெற வேண்டும் என்பதையும் வலியுறுத்தல் வேண்டும். பாடசாலைக் காலத்தில் இத்தகைய பழக்கத்தினை விதைக்கும் பொறுப்பு ஆசிரியரையே சார்கின்றது (கருணாநிதி, 2005).

ஆரம்பபிரிவு மாணவர்களின் வாசிப்புதிறன் என்பது பல்வேறு விடயங்களை கற்பதற்கு மிகவும் தேவையானது. வாசிப்புப் பழக்கமானது பாடசாலை செல்லும் காலத்திலிருந்தே விருத்தி செய்யப்படாத பிள்ளை பிற்காலத்தில் அதனை விருத்தி செய்ய முடியாத நிலையே காணப்படுவதுடன் அதற்கான சந்தர்ப்பங்களும் கிடைப்பது அரிதாகும் (கலாமணி, 2005).

தக்ஷாயினி (2020) என்பவர் செய்த கனிஸ்ட இடைநிலை மாணவர்களின் மொழித்திறன் விருத்தி ஆசிரியரின் வினைத்திறனான கற்பித்தலில் ஏற்படுத்தும் செல்வாக்கு என்ற ஆய்வு முடிவின் படி மொழித்திறனில் இடர்பாடுடைய மாணவர்களுக்கு பரிகாரச் செயற்பாடுகளும் வழிமுறைகளும் மேற்கொள்வது தொடர்பாகக் குறிப்பிடும் போது மாலை நேர வகுப்புக்கள் கற்றல் அணுகுமுறைகள் என்பன சிறப்பாக அமைய வேண்டும் ஆசிரியர்கள் மாணவர் விரும்பக் கூடிய கற்கும் சூழலை ஏற்படுத்திக் கொடுப்பதுடன் பரிகாரச் செயற்பாடுகளின் போது மாணவர்களை பரிசு, பாராட்டுக்கள் வழங்கி ஊக்கப்படுத்துவதுடன் ஆசிரியர் மாணவரின் விருப்பு வெறுப்பிற்கேற்பவும் அவர்களின் ஆர்வத்தை தூண்டும் வகையிலும் மொழிப்பாடத்தைக் கற்பிப்பதுடன் மாணவர்களை புத்தகம், பத்திரிகை வாசித்தல், நற்சிந்தனை கூறச் செய்தல் போன்ற செயற்பாடுகளில் ஊக்குவிக்க வேண்டும் எனக் கூறியுள்ளார்.

Almutairi (2018) என்பவர் செய்த Effective Reading Strategies for Increasing the Reading Comprehension Level of Third-Grade Students with Learning Disabilities என்ற ஆய்வில் வாசிக்கும் திறனை ஏற்படுத்த வாசிக்கும் போது வாசகரை உற்சாகப்படுத்துவதும் அவசியம். ஏனெனில் இது ஒரு மன நடவடிக்கை அல்லது செயல்முறையாகும். இது எழுதுதல், பேசுதல், கேட்டல் போன்ற திறன்களுடன் இணைக்கப்பட வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

Abdelhalt (2017) என்பவர் செய்த Develop EFL students' reading comprehension and reading engagement Effects of a proposed instructional tagy Theory and Practice in Language studies என்ற ஆய்வில் வாசிப்பு திறனை மேம்படுத்துவதற்கு சமூகச் சூழல், இலக்கிய வட்டங்கள், குழு விவாதங்கள், வாசிப்பு பயிற்சி, புத்தகக் கழகங்கள் மற்றும் ஆசிரியர் பகுப்பாய்வு போன்றன உதவுகின்றன. ஆகவே பரிகார கற்பித்தல் செயற்பாடு மேற்கொள்வது அவசியமாகும் எனக் கூறியுள்ளார்.

**ஆய்வு முறையியல்**

ஆய்வு முறையியல் சிறப்பானதாகக் காணப்படும் பட்சத்திலேயே தீர்வுகள் நம்பகத் தன்மையாக அமையும். இவ்வாய்வில் அளவு ரீதியான முறையியல்களும், பண்பு ரீதியான முறையியல்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன. அளவு ரீதியான முறையியலினுள் எண்கள், அட்டவணைகள், வரைபடங்கள், மாணவர் தொகை, விகிதாரங்கள் போன்றன உள்ளடக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் புறவயத்தன்மையாக ஆய்வு கொண்டு செல்லப்படுகிறது. ஆய்வு தொடர்பான கோட்பாடு ரீதியான உறுதிப்படுத்தலுடன் தொடர்பு கொண்டதாக பண்பு ரீதியான முறையியல் காணப்படுகின்றது.

இங்கு சம்பந்தப்பட்ட பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்களிடத்தில் வினாக்கொத்து மூலமாகவும், பெற்றோர்களிடத்தில் நேர்காணல் மூலமாகவும், மாணவர்களுக்கான அவதானிப்புப் படிவத்தின் மூலமாகவும் பெறப்பட்ட தகவல்கள், அபிப்பிராயங்கள், எண்ணங்கள், வெளிப்பாடுகள் போன்றன அகவயமான உணர்வுகளும் ஆய்வில் கருத்திற் கொள்ளப்படுகின்றன.

இதன்படி அளவு ரீதியான, பண்பு ரீதியான விடயங்களை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வு அமைவதால் இவ்வாய்வில் கலப்பு ஆய்வு அணுகுமுறை வடிவம் பயன்படுத்தப்பட்டுள்ளது. அத்தோடு வினாக்கொத்து, நேர்காணல் மற்றும் அவதானம் மூலம் பெறப்பட்ட தரவுகளை அளவு ரீதியாகவும், பண்பு ரீதியாகவும் பகுப்பாய்வு செய்து அதன் மூலம் முடிவுகளைக் கண்டறிவதாக இவ்வாய்வானது அமைவதால் இது ஒரு அளவை நிலை ஆய்வாக அமைந்துள்ளது.

அளவைநிலை ஆய்வு தற்போது நடைமுறையில் உள்ள சவால்களைக் கண்டறிதலுக்காகப் பயன்படுத்தப்படுகின்றது.

***மாதிரித் தெரிவு***


அந்தவகையில் ஆய்வாளனால் ஏறாவூர் கல்விக் கோட்டமானது 4 1AB பாடசாலைகளும் ஒரு 1C பாடசாலையும் 5 வகை ll பாடசாலைகளும் 8 வகை lll பாடசாலைகளும் என மொத்தமாக 18 பாடசாலைகள் காணப்படுகின்றன. 18 பாடசாலைகளில் இருந்து ஆய்வின் நோக்கம் கருதி கனிஸ்ட இடைநிலை வகுப்புக்களைக் கொண்ட 4 1AB பாடசாலைகளும் 1 1C பாடசாலையும் 5 வகை ll பாடசாலைகளும் என 10 பாடசாலைகள் ஆய்விற்காக தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் 10 பாடசாலைகளில் இருந்து அதிபர் தரத்தையுடைய 12 அதிபர்கள் நோக்க மாதிரியில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். 10 பாடசாலைகளிலிருந்தும் கனிஸ்ட இடைநிலை வகுப்புக் கற்பிக்கும் 108 ஆசிரியர்களிலிருந்து 2:1 எனும் விகிதாசாரத்தின் அடிப்படையில் 54 ஆசிரியர்களும் படையாக்கப்பட்டு பின் இலகு எழுமாற்று மாதிரியின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

10 பாடசாலைகளில் இருந்தும் கனிஸ்ட இடைநிலை வகுப்பில் கல்வி கற்கும் வாசிப்புத் திறன் பின்னடைந்த 228 மாணவர்களில் இருந்து ஆண், பெண் என்ற ரீதியில் படையாக்கப்பட்டு பின் இலகு எழுமாற்று மாதிரியின் அடிப்படையில் 2:1 எனும் விகிதாசாரத்தின் அடிப்படையில் 105 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். பெற்றோர்களின் மாதிரித் தெரிவானது ஆய்வு மாதிரியாக தெரிவு செய்யப்பட்ட 105 மாணவர்களில் 5:1 விகிதத்தில் 20 பெற்றோர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவ்வாறாக இவ்வாய்வுக்காக ஆய்வாளனால் மாதிரிகள் தெரிவு செய்யப்பட்டு ஆய்வுக்குட்படுத்தப்பட்டு உள்ளனர்.

**தரவுப் பகுப்பாய்வுகள்**

***வாசிப்புத்திறன் தொடர்பாக மாணவர்களிடமுள்ள ஆற்றல்களின் நிலை***

மாணவர்களிடம் வாசிப்பு திறனானது எந்நிலையில் காணப்படுகின்றது? என்பது பற்றி ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களிடம் வினாக்கொத்து எனும் ஆய்வுக்கருவி மூலம் வினவப்பட்ட போது 77.78% ஆன ஆசிரியர்களும் 58.33% ஆன அதிபர்களும் மாணவர்களிடம் வாசிப்புத்திறன் குறைவாகவே காணப்படுவதாக பதிலளித்தனர்.





உரு 4.1 மாணவர்களின் வாசிப்புதிறனின் நிலை தொடர்பாக ஆசிரியர்கள், அதிபர்களின் கருத்துக்கள்

உரு 4.1 இன்படி வாசிப்புத்திறன் குறைவாக இருப்பதற்கான காரணங்கள் யாதாக இருக்கலாம் என ஆசிரியரிடமும் அதிபர்களிடமும் வினவிய போது மாணவர்கள் வீட்டில் வாசிப்பதில் அதிக அக்கறை செலுத்துவதில்லை, பெற்றோர்கள் வீட்டில் வாசிப்பதில் அதிக அக்கறை செலுத்துவதில்லை, வகுப்பில் வாசிப்பதற்கு ஆர்வம் காட்டாமை, விளையாட்டு மற்றும் தொடரப்பு சாதனங்களை பயன்படுத்துவதிலேயே அதிக நேரத்தை மாணவர்கள் கழிக்கின்றனர் போன்ற காரணங்களைக் குறிப்பிட்டிருந்தனர்.

***வாசிப்புத் திறனின் பின்னடைவுக்கான காரணங்கள்***

பெற்றோர்களால் வீட்டில் வாசிப்புப் பயிற்சி கொடுக்கும் நிலை எவ்வாறுள்ளது? என்பது பற்றி ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களிடம் வினாக்கொத்து எனும் ஆய்வுக்கருவி மூலம் வினாவப்பட்ட போது 85.19% ஆன ஆசிரியர்களும் 66.67% ஆன அதிபர்களும் பெற்றோர் வீட்டில் வாசிப்பு பயிற்சி வழங்கும் நிலை குறைவாக உள்ளதாக பதிலளித்தனர்.





உரு 4.2 : வீட்டில் வாசிப்புப் பயிற்சி வழங்குவது தொடர்பாக ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் கருத்துக்கள்

உரு 4.2 : இன்படி 85.19% ஆன ஆசிரியர்களும் 66.67% ஆன அதிபர்களும் பெற்றோர் வீட்டில் வாசிப்பு பயிற்சி வழங்கும் நிலை குறைவாக உள்ளதாக குறிப்பிட்டுள்ளதன் படி வீட்டில் வாசிப்பு பயிற்சி வழங்குதல் குறைவான நிலையில் உள்ளதை வெளிப்படுத்துகின்றது.

மேலும் மாணவர்களின் வாசிப்புத்திறன் பின்னடைவிற்கான வேறு காரணங்களாக முன்பாடசாலைக் கல்வி முறையாகப் பெற்றுக்கொள்ளாமை, ஆரம்ப வகுப்புக்களின் கற்றல் செயற்பாடு முறையாக இடம்பெறாமை, மாணவர்களது வரவு ஒழுங்கீனம், வீடுகளில் அதிக நேர திறன்பேசி மற்றும் சமூக ஊடகங்களின் பாவனையால் வாசிப்பு மீது அக்கரையின்மை போன்றவற்றைக் குறிப்பிட்டுள்ளதுடன் 87.04% ஆன ஆசிரியர்களும் 75% ஆன அதிபர்களும் வாசிப்புத்திறன் பின்னடைவில் உடலியல் சார் காரணிகள் தாக்கம் செலுத்துவதாகவும், 90.74% ஆன ஆசிரியர்களும் 83.33% ஆன அதிபர்களும் வாசிப்புத்திறன் பின்னடைவில் உளவியல் சார் காரணிகள் தாக்கம் செலுத்துவதாகவும் குறிப்பிட்டனர்.

***வாசிப்புத்திறன் பின்னடைவால் ஏற்படும் சவால்கள்***

வாசிப்புத் திறன் பின்னடைவால் பயிற்சிக் கொப்பிகளில் வழங்கப்படும் வினாக்களுக்கு விளங்கி சரியாக விடையளிக்கும் நிலை எவ்வாறுள்ளது? என்பது பற்றி ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களிடம் வினாக்கொத்து எனும் ஆய்வுக்கருவி மூலம் வினாவப்பட்ட போது 96.30% ஆன ஆசிரியர்களும் 91.67% ஆன அதிபர்களும் குறைவு என விடையளித்தனர்.





உரு 4.3 பயிற்சிக் கொப்பிகளில் வழங்கப்படும் வினாக்களுக்கு விளங்கி சரியாக விடையளிக்கும் நிலை தொடர்பாக ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் கூறிய கருத்துக்கள்

உரு 4.3 : இன்படி வாசிப்புத் திறன் பின்னடைவால் பயிற்சிக் கொப்பிகளில் வழங்கப்படும் வினாக்களுக்கு விளங்கி சரியாக விடையளிக்கும் நிலை குறைவாக இருப்பதற்கான காரணங்கள் யாதாக இருக்கலாம் என ஆசிரியர்களிடமும் அதிபர்களிடமும் வினவிய போது, வினாக்களை பிழையாக வாசித்து விளங்குதல், விடையளிப்பதற்கான அறிவுறுத்தல்களை பிழையாக வாசித்து விளங்குதல், வாசித்து கற்றுக் கொண்ட விடயங்களை ஞாபகப்படுத்தி எழுத முடியாமை போன்ற காரணங்களைக் குறிப்பிட்டிருந்தனர்.

மேலும் பரீட்சைக்கு வெற்றிகரமாக முகங்கொடுத்தல், சுய கற்றல், மாணவர்களின் ஆளுமைத் திறன் விருத்தி, இணைப்பாட விதான செயற்பாடுகளில் முன்வந்து கலந்து கொள்ளும் நிலை, கற்பித்தலை இடர்பாடின்றி மேற்கொள்ளும் நிலை போன்றவற்றிற்கு சவாலாகக் காணப்படுவதாகவும் ஆசிரியர்களும் அதிபர்களும் குறிப்பிட்டிருந்தனர்.

***வாசிப்புத் திறன் விருத்திக்கான ஆலோசனைகளும் பரிகார செயற்பாடுகளும்***

மாணவர்களின் வாசிப்புத்திறனை வளர்ப்பதற்கான விசேட பயிற்சி வகுப்புக்கள் பாடசாலையில் வழங்கப்படும் நிலை எவ்வாறுள்ளது? என்பது பற்றி ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களிடம் வினாக்கொத்து எனும் ஆய்வுக்கருவி மூலம் வினவப்பட்ட போது 68.52% ஆன ஆசிரியர்களும் 58.33% ஆன அதிபர்களும் குறைவாக உள்ளதாக பதிலளித்தனர்.




உரு 4.4 வாசிப்புத்திறனை வளர்ப்பதற்கான விசேட பயிற்சி வகுப்புக்கள் நடத்தப்படுவது தொடர்பாக ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் கூறிய கருத்துக்கள்

உரு 4.4 இன்படி மாணவர்களின் வாசிப்புத்திறனை வளர்ப்பதற்கான விசேட பயிற்சி வகுப்புக்கள் பாடசாலையில் வழங்கப்படும் நிலை குறைவாக இருப்பதற்கான காரணங்கள் யாதாக இருக்கலாமென ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களிடம் வினவிய போது நவீன துணைச்சாதனங்களின் பற்றாக்குறை, தொழிநுட்ப வசதிகள் குறைவு, நேரவளம் குறைவு, கணனி தொடர்பான வாண்மைத்துவப் பயிற்சிகளை பாடசாலை வழங்காமை, 40 நிமிடத்தில் கணனியைப் பயன்படுத்தி கற்பிப்பதில் அடிக்கடி ஏற்படும் மின்வெட்டுக்கள் போன்ற காரணங்களைக் குறிப்பிட்டிருந்தனர்.

மேலும் 81.48% ஆன ஆசிரியர்களும் 66.67% ஆன அதிபர்களும் பரிகாரச் செயற்பாடுகளில் மாணவர்களின் துலங்கல்கள் குறைவாக இருப்பதாகவும், 74.07% ஆன ஆசிரியர்களும் 66.67% ஆன அதிபர்களும் பரிகாரச் செயற்பாடுகளின் போது வாசிப்புத்திறனை வளர்ப்பதற்கு புதிய கற்பித்தல் முறைகளைப் பயன்படுத்தும் நிலை குறைவாக இருப்பதாகவும், 72.22% ஆன ஆசிரியர்களும் 66.67% ஆன அதிபர்களும் பாடசாலையில் வாசிப்புத்திறனை வளர்ப்பதற்கான தனியான குழு காணப்படல் குறைவாக இருப்பதாகவும் பதிலளித்தனர்.

**முடிவுகளும் விதப்புரைகளும்**

***வாசிப்புத்திறன் தொடர்பாக மாணவர்களிடமுள்ள ஆற்றல்களின் நிலை***

*முடிவுகள்.*

1. 77.78% ஆன ஆசிரியர்களும் 58.33% ஆன அதிபர்களும் உறுதிப்படுத்தியதற்கு அமைவாக கனிஸ்ட இடைநிலை மாணவர்களிடத்தில் வாசிப்புத்திறன் குறைவாகவே காணப்பட்டது.
2. மாணவர்கள் வகுப்பறையில் ஆர்வமாக முன்வந்து வாசிக்கும் மனநிலை குறைவாகவே காணப்படுகின்றது.
3. வாசிக்கும் விடயங்களை கிரகித்து விளங்கிக் கொள்ளும் நிலை மாணவர்களிடம் குறைவாகவே காணப்படுகின்றது.
4. ஒலி உச்சரிப்புச் சொற்களின் வேறுபாடுகளுக்கு அமைய வாசிக்கும் நிலை குறைவாகவே காணப்பட்டதுடன் குறில், நெடில்களை வேறுபிரித்து வாசிக்க முடியாமை நிலை காணப்பட்டது.

*விதப்புரைகள்*

1. வாசிப்புத்திறனின் முக்கியத்துவம் தொடர்பாகவும் கற்றலுக்கு வாசிப்புத்திறனின் அவசியம் தொடர்பாகவும் மாணவர்களுக்கு ஆலோசனைகளை வழங்க பாடசாலையும் வலயக்கல்வி நிறுவனமும் இணைந்து கருத்தரங்குகள் நிகழ்வுகளை ஏற்பாடு செய்யலாம்.
2. வாசிப்புச் செயற்பாட்டிற்காக மாணவர்களைக் கவரக் கூடிய நவீன கற்றல் கற்பித்தல் உபகரணங்களை உபயோகித்தல்.
3. விடயங்களை ஞாபகப்படுத்தும் வகையில் ஆசிரியர்கள் தமது கற்பித்தல் செயற்பாடுகளை பிள்ளையின் செவிமெடுத்தல் திறனை விருத்தியாக்கும் வகையில் மாணவர்களுக்கு சொற்கள் பந்திகளைக் கொடுத்து வாசித்து கிரகிக்க வைத்தல் வேண்டும்.
4. மாணவர்கள் வாசிப்புக்கு அடிப்படையாக அமையும் எழுத்துக்களையும் ஒலி வேறுபாடுகளையும் இனங்கண்டு வாசிப்பதற்கான பயிற்சியில் தினமும் ஈடுபட வேண்டும.

***வாசிப்புத் திறனின் பின்னடைவுக்கான காரணங்கள்***

*முடிவுகள்.*

1. வகுப்பறைச் சூழல் கற்றலை முன்னெடுத்துச் செல்வதற்கு பொருத்தப்பாடு குறைவாகவே காணப்படுவதுடன் வகுப்பறையில் போதிய இட வசதிகள் இல்லாத நிலை காணப்படுகின்றது. மேலும் நவீன கற்பித்தல் துணைச்சாதனங்கள் இல்லாத நிலையிலும் வகுப்பறைகள் காணப்பட்டன.

2. பெற்றோர்களால் வீட்டில் வாசிப்புப் பயிற்சி கொடுக்கும் நிலை குறைவாகவே காணப்படுவதுடன் வாசிப்புத் திறனை விருத்தி செய்வது தொடர்பாக அதிபர், ஆசிரியர்களினால் கூறப்படும் ஆலோசனைகளை பெற்றோர்கள் செயற்படுத்தும் நிலை குறைவாகவுமுள்ளது.
3. மாணவர்களின் உடலியல் குறைபாடு வாசிப்புத்திறன் பின்னடைவை ஏற்படுத்துகின்றது. 47.62% மான மாணவர்கள் உடற்குறைபாடு காரணமாக வாசிப்பதில் பின்னடைகின்றனர்.
4. மாணவர்களின் உளவியல் குறைபாடு வாசிப்புத்திறன் பின்னடைவை ஏற்படுத்துகின்றது.
5. முன்பாடசாலைக் கல்வி முறையாகப் பெற்றுக் கொள்ளப்படவில்லை
6. ஆரம்ப வகுப்புக்களின் கற்றல் செயற்பாடு முறையாக இடம்பெறவில்லை
7. மாணவர்களது வரவு ஒழுங்கீனம் காணப்படுகின்றது.

*விதப்புரைகள்*

1. கற்றல் கற்பித்தல் செயற்பாட்டிற்கு தேவையான வளங்களையும் வசதிகளும் போதுமானளவு பெற்றுக் கொள்ள அரசாங்கத்துடனும் அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் தொண்டு நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு உரிய முறையில் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுத்தல்.
2. வீட்டில் பொருத்தமான வாசிகசாலை வசதிகளை ஏற்படுததிக் கொடுப்பதுடன் பொது வாசிகசாலைக்கு பிள்ளைகளை அழைத்துச் செல்லுவதுடன் பிள்ளைகள் கற்பதற்குரிய உளரீதியான, பௌதீக ரீதியான வீட்டுச் சூழலை உருவாக்கி கொடுப்பதுடன், வீட்டில் உள்ள படித்தவர்கள் மாணவர்களின் கற்றலுக்கு உதவி செய்ய வேண்டும்.
3. தெளிவாக பார்த்து வாசிக்க முடியாத பிள்ளகைளுக்கும் கேட்டல் குறைபாடுடைய மாணவர்களை முறையாக இணங்கண்டு மருத்துவ ஆலோசனைகளை மேற்கொள்ள பெற்றோருடன் இணைந்து பாடசாலை செயற்பட வேண்டும்.
4. ஏனைய மாணவர்களைப் போன்று வாசிப்பில் பின்டைவான மாணவர்களுக்கும் தன்னாலும் வாசிக்க முடியும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்த ஆரம்பத்தில் சிறிய சிறிய சொற்களைக் கொடுத்து படிப்படியாக வாசிக்க வைத்தல்
5. ஆரம்பத்தில் படங்களோடு கூடிய சொற்களை வாசிப்பதற்கான செயற்பாடுகளை திட்டமிட்டு கொள்ளல்.
6. சொல்லட்டைகள் போன்ற கற்றல் துணைகளை முன்னரே தயாரித்து வழங்குவதற்கான ஏற்பாடுகளை திட்டமிட்டுக் கொள்ளலாம்.
7. வரவு குறைவாகவுள்ள மாணவர்களை இனங்கண்டு அவர்களின் பெற்றோர்களை அழைத்து ஆலோசனை வழங்குவதுடன் அவ்வாறான மாணவர்களை பாடசாலையில் அதிபர் மற்றும் வழிகாட்டல் ஆலோசனை சேவை மூலமும் மாணவர்களை அழைத்து அவர்களுக்கு வழிகாட்டல்களை வழங்குதல்

***வாசிப்புத்திறன் பின்னடைவால் ஏற்படும் சவால்கள்***

*முடிவுகள்.*

1. சுயமாக வாசித்து கற்பதில் சவால்களை எதிர்கொள்கின்றனர்.
2. வாசிப்புத்திறன் பின்னடைவினால் மாணவர்கள் பரீட்சையை வெற்றிகரமான முறையில் முகங்கொடுப்பதில் சவாலை எதிர்கொள்ளுகின்றனர்.
3. மாணவர்கள் பயிற்சிக் கொப்பிகளில் வழங்கப்படும் வினாக்களுக்கு விளங்கி சரியாக விடையளிக்கும் நிலை குறைவாகவே காணப்பட்டது.
4. ஆளுமைத்திறன் விருத்திக்கு வாசிப்புத்திறன் பின்னடைவு சவாலாகக் காணப்படுகின்றது.
5. வாசிப்புத்திறன் பின்னடைவு காரணமாக மாணவர்கள் இணைப்பாட விதான செயற்பாடுகளில் முன்வந்து கலந்து கொள்ளும் நிலை குறைவாக உள்ளது.
6. வாசிப்புத்திறன் பின்னடைவுள்ள மாணவர்கள் வகுப்பறையில் காணப்படும் போது கற்பித்தலை இடர்பாடின்றி மேற்கொள்ளும் நிலை குறைவாகவே காணப்படுகின்றது. 94.44% ஆன ஆசிரியர்களும் 83.33% ஆன அதிபர்களும் வாசிப்புத்திறன் பின்னடைவுள்ள மாணவர்கள் வகுப்பறையில் காணப்படும் போது கற்பித்தலை மேற்கொள்வதில் இடர்படுவதாக கூறினர்.

*விதப்புரைகள்*

1. சொற்களை உச்சரித்து வாசிக்கும் திறனை விருத்தி செய்ய சுயமாக உச்சரிப்பு பயிற்சியில் ஈடுபட வைத்தல்.
2. பரீட்சைகள் தொடர்பாக சிறந்த முறையில் வாசித்து கிரகித்து விடையளிக்க பயிற்சி அளித்தல்
3. பயிற்சிக் கொப்பிகளில் வினாக்களை வழங்கிவிட்டு மாணவர்களை வகுப்பறையில் அதனை வாசிக்க வைத்தல்
4. வகுப்பறையில் முன்வந்து வாசிக்க வைக்க கவர்ச்சியான கற்பித்தல் வழிமுறைகளைப் பயன்படுத்த வேண்டும்
5. தமிழ்த்தினப் போட்டி, தேசிய வாசிப்பு மாதமான ஒக்டோபர் மாதத்தில் வாசிப்புடன் தொடர்புடைய சிறுகதைப் போட்டிகள், கட்டுரை, கவிதை, வாசித்தல் போன்ற போட்டிகளை பாடசாலையில் ஏற்பாடு செய்து அனைத்து மாணவர்களையும் அதில் கலந்து கொள்ள தூண்டுதல் வேண்டும்.
6. வகுப்பறையில் வாசிப்புத்திறன் பின்னடைவாக உள்ள மாணவர்கள் இருக்கும் போது அவர்களுக்கு கற்றல் செயற்பாட்டில் மற்றைய மாணவர்களைப் போன்று ஈடுபட சந்தர்ப்பமளிப்பதுடன் அந்த மாணவர்களுக்கும் விளங்கக் கூடிய வகையில் அவர்களுக்கு கற்பித்தல் முறைகள் கற்பித்தல் சாதனங்களைப் பயன்படுத்த வேண்டும்.

***வாசிப்புத் திறன் விருத்திக்கான ஆலோசனைகளும் பரிகார செயற்பாடுகளும்***

*முடிவுகள்*

1. மாணவர்களின் வாசிப்புத்திறனை வளர்ப்பதற்கு மேற்கொண்ட செயற்பாடுகளினால் வாசிப்புத்திறனின் முன்னேற்ற நிலை குறைவாகவே காணப்படுகின்றது. 81.48% ஆன ஆசிரியர்களும் 66.67% ஆன அதிபர்களும் மாணவர்களின் வாசிப்புத்திறனை வளர்ப்பதற்கு மேற்கொண்ட செயற்பாடுகளினால் வாசிப்புத்திறனின் முன்னேற்ற நிலை குறைவு என்றனர்.
2. பரிகாரச் செயற்பாடுகளின் போது வாசிப்புத்திறனை வளர்ப்பதற்கு புதிய கற்பித்தல் முறைகளைப் பயன்படுத்தும் நிலை குறைவாகவே காணப்படுகின்றது.
3. வாசிப்புத்திறனை வளர்ப்பதற்கான தனியான குழு காணப்படுவது குறைவு
4. மாணவர்களின் வாசிப்புத்திறனை வளர்ப்பதற்கான விசேட பயிற்சி வகுப்புக்கள் பாடசாலையில் வழங்கப்படும் நிலை குறைவாகவே காணப்படுகின்றது.

*விதப்புரைகள்*

1. வாசிப்பு சார்பான போட்டி நிகழ்வுகள், அதற்கான பரிசளிப்புகள் மற்றும் ஏனைய ஊக்குவிப்புக்கள், அன்றாடம் பத்திரிகைகளில் வரும் செய்திகளை வாசிக்கச் செய்தல், அவற்றை மறுநாள் வகுப்பறையில் கேட்டல் போன்றவற்றை செய்ய வேண்டும்.
2. பல்தர, பல்மட்ட கற்பித்தல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அதிபர் ஆசிரியர்களின் நேரசூசியில் நெகிழ்ச்சியை ஏற்படுத்திக் கொடுப்பதுடன் திறன்பேசிகளைப் பயன்படுத்தியும் ஏனைய இணையத்தள வசதிகள் மூலமாகவும் எண்ணிமப்படுத்திய ஆவணங்களை வாசிப்பது தொடர்பாக வழிகாட்டலும் பயிற்சியுமளித்தல்.
3. மொழித்திறனில் தேர்ச்சியுடைய ஆசிரியர்களைக் கொண்டு பாடசாலையில் மாணவர்களின் வாசிப்புத்திறனை வளர்ப்பதற்குரிய குழு அமைக்கப்பட்டு அதனை அதிபர் வழிநடத்துவதோடு ஊக்கப்படுத்த வேண்டும்.
4. வாசிப்பு பயிற்சிக்கான மாலைநேர வகுப்புக்கள், கற்றல் அணுகுமுறைகள் என்பன சிறப்பாக அமைய வேண்டும். இதற்கு அதிபர், ஆசிரியர், பாடசாலைச் சமூகத்தினர் போன்றோர் ஒத்துழைப்புகளை வழங்க வேண்டும்.
5. மாணவர்களுக்கு ஆரம்பத்திலேயே வாசிப்புத்திறன் விருத்திக்கான பிரத்தியோக செயற்றிட்டங்களுடனான பரிகார கற்பித்தல் செயற்பாடுகளை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்த நடவடிக்கையெடுத்தல்.

**உசாத்துணைகள்**

அப்துல் லத்தீப்,எம்.ஐ. (2007). *பரிகார வாசிப்புக் கற்பித்தல் நுட்பங்கள்.* சுதைஸ் அன் பிரதர்ஸ். பாலமுனை.

அருள்மொழி,செ. (2008). *கல்வி ஆய்வு முறைகள்.* எவகிறீன் அச்சகம்.

கருணாநிதி,மா. (2008). *கற்றல் கற்பித்தல் மேம்பாட்டுக்கான வழிமுறைகள்.* சேமமடு பொத்தகசாலை.

கிறிஸ்ரின் டிலானி,யே. (2014). *இடைநிலை மாணவர்களின் வாசிப்பு ஆர்வத்தில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள்.* யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

தக்ஷாயினி,ரா. 2020. *கனிஷ்ட இடைநிலை மாணவர்களின் மொழித்திறன் விருத்தி ஆசிரியரின் வினைத்திறனான கற்பித்தலில் ஏற்படுத்தும் செல்வாக்கு.* கிழக்குப் பல்கலைக்கழகம். தமிழ் ஆய்வு ஆராய்ச்சியின் சர்வதேச நடுவர் இதழ்.

Abdelhalt,M. (2017). *Develop EFL students' reading comprehension and reading engagement Effects of a proposed instructional tagy Theory and Practice in Language studies***.** Faculty of Education. Helwan University. https://doi.org/10.17507/tpls.0701.05

Almutairi,N.R. (2018). *Effective Reading Strategies for Increasing the Reading Comprehension Level of Third-Grade Students with Learning Disabilities.* Dissertations. 3247. Western Michigan Unuversity. https://scholarworks.wmich.edu/dissertations/3247

Garfield,D. (2007). A reading strategy for a UK university: Reviewing the literature on reading, literacy and libraries, with particular regard to the HE sector. *Journal of Information Literacy,* 2(2), 18–31. UK university https://doi.org/10.11645/2.2.60

Hadi, S.Haryanto,H., & AM, M.A. (2022). Classroom Assessment Tool using Learning Management System-based Computerized Adaptive Test in Vocational High Schools. *Journal of Educational Research and Evaluation,* 6(1), 143–155. https://doi.org/10.23887/jere.v6i1.35630

Monique seneschal (2009). *Literacy language and emotional development*. Carlenton university. Canada. https://www.child-encyclopedia.com/language-development-and-literacy/according-experts/literacy-language-and-emotional-development